

திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட மாநகர தி.மு.க. மற்றும் மத்திய மாவட்டம் சார்பில் திருச்சி தென்னூர், பாபு செட்டி தெரு பகுதியில் திராவிட மாடலின் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு கலந்து கொண்டு பொதுமக்களுடன் சமத்துவப் பொங்கல் வைத்தார். இதனைத் தொடர்ந்து 3000த்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு வேஷ்டி, சேலை, கரும்பு,பொங்கல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளரும் மேயருமான மு.அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் விஜியா ஜெயராஜ் கருணாநிதி, கூடடத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன் நகர் பகுதிச் செயலாளர் கமால், நாகராஜ், முஸ்தபா, வட்டச் செயலாளர் காளை, வட்ட பிரதிநிதி கர்ணா, சோழன் சம்பத், முத்து பழனி, எம்.ஆர்.எஸ்.குமார் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### 23 ஆம் புலிகேசி பழனிசாமி

# அமாவாசைகளை உருட்டியே அரசியல் செய்கிறார்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கடும் விமர்சனம்!



சென்னை, ஜன. 21 -

"ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புற முதுகிட்டு ஓடும் 23 ஆம் புலிகேசி பழனிசாமி அமாவாசைகளை உருட்டியே அரசியல் செய்து கொண்டிருக்கிறார்" என்று அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கடும் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

"நாம முன்னுக்கு வரணும்னா நாய் என்ன... மனுஷன் என்ன? ஏறி மிதிச்சு போயிட்டே இருக்கணும்" 'அமைதிப்படை' படத்தில் வரும் டயலாக் இது. அதில் வரும் 'அமாவாசை' கேரக்டர் தான் எடப்பாடி பழனிசாமி. பலரை ஏறி மிதித்து, ஊர்ந்து சென்று, பதவியைப் பிடித்த பழனிசாமி,

"திமுக ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைதான் இருக்கிறது" என நேற்று முன்தினம் பேசியிருக்கிறார். ஆட்சியை இழந்த இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் அமாவாசை யென உருட்டியே அரசியல் செய்து கொண்டிருக்கிறார் பழனிசாமி.

"2026 ஆம் வருடம் சட்டசபைக்கும் தேர்தல் வரும். இன்னும் 27 அமாவாசைகள் மட்டுமே ஸ்டாலின் முதலமைச்சராக இருக்க முடியும். மீண்டும் அதிமுக அரசு தமிழகத்தில் அமையும்" - 2022 பிப்ரவரி 12. சேலம், தாரமங்கலம்.

"இன்னும் 28 அமாவாசைகள் மட்டுமே திமுக அரசு ஆட்சியில் இருக்கும்" - 2024 ஜனவரி 25. எக்ஸ் தள பதிவு. "திமுக ஆட்சியின் ஆயுட் காலம் 19 அமாவாசைகள்தான். நாட்கள் எண்ணப்படுகின்றன" - 2024 செப்டம்பர் 20. X தளப்பதிவு.

இப்படி ஒவ்வொரு அமாவாசைக்கும் பழனிசாமி கணக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். அமாவாசைகள்தான் கடந்து சென்று கொண்டிருக்கிறன. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புறமுதுகிட்டு ஓடும் 23 ஆம் புலிகேசி பழனிசாமி, இன்னும் நூறு பௌர்ணமிகளுக்கு தளபதிதான் முதலமைச்சராக தொடர்வார் என்பதை 2026 -ல் உணர்ந்து கொள்வார்.

இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தமது 'எக்ஸ்' வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில்

# சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் சமத்துவப் பொங்கல் விழா!

சேலம், ஜன. 21-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் சமத்துவப் பொங்கல் விழா 13.01.2025 அன்று சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

பொங்கல் திருநாளையொட்டி அரசு அலுவலர்கள், பணியாளர்கள், நேபாளம், இங்கிலாந்து, ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் உள்ளிட்ட பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் பாரம்பரிய உடையணிந்து பங்கேற்ற இச்சமத்துவப் பொங்கல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவையொட்டி, சேலம் மாவட்ட ஆட்சியரகம் முழுவதும் வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பொங்கல் பராம்பரிய பொருட்கள், அழகிய வண்ணமிகு கோலங்கள், தோரணங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்விழாவில் பாரம்பரிய மிக்க தப்பாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர், அரசு அலுவலர்கள் பங்கேற்ற உறியடி, கயறு இழுத்தல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது. இன்றைய தினம் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் பரிசுகளை வழங்கினார்கள்.

இச்சமத்துவப் பொங்கல் விழாவில் பச்சரிசி, தினை, குதிரைவாலி, சாமை, வரகு உள்ளிட்ட சிறுதானியங்களைக் கொண்டு பல்வேறு வகையிலான சுவையான பொங்கல் செய்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது. குறிப்பாக, ஒரே நேரத்தில் அனைவரும் ஒன்று கூடி 5 மண் பானைகளில் பொங்கல் வைத்து வழிபட்டனர். மேலும் இவ்விழாவில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பயணிகளுக்கு மாட்டு வண்டியில் மாவட்ட ஆட்சியரகத்தைச் சுற்றி பயணம் செய்து மகிழ்ந்தனர்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர் சமத்துவ பொங்கல் விழாவிற்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளை மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

இவ்விழாவில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித்ஆதித்ய நீலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செ. ராஜன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஆழியார் அணையில் படகு இல்லம் அமைத்து படகு சவாரி ஏற்படுத்துதல் மற்றும் பூங்கா மேம்பாட்டு பணிகள், கோதவாடி ஊராட்சியில் உள்ள குளத்திற்கு உபரிநீர் மூலம் நீர்நிரப்பி சுற்றுலாத் தலமாக மாற்றுவது தொடர்பாக சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கா.ஈஸ்வரசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தன், கௌசிகா நீர்க்கரங்கள் தலைவர் பி.கே.செல்வராஜ், சதாசிவம், மாவட்ட சுற்றுலா அலுவலர் ஜெகதீஸ்வரி, செயற் பொறியாளர் சிவகுமார், வட்டாட்சியர் கணேஷ்பாபு மற்றும் சுற்றுலா வளர்ச்சி கழக செயற்பொறியாளர், திட்ட ஆலோசகர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க., குன்றாண்டார்கோவில் ஒன்றிய தி.மு.க. சார்பில் துவரவயலில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், விராலிமலை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, மாவட்டத் துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி, துணை மேயர் எம்.லியாகத் அலி, ஒன்றியச் செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், கே.எஸ்.சந்திரன், வெ.முத்துகிருஷ்ணன், மு.பி.ம. சத்தியசீலன், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர்.சாமிநாதன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், கீரனூர் நகரச் செயலாளர் பிஅண்ணாதுரை, டி.செல்வம், எம்.செந்தில்குமார், கை.பழனிச்சாமி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.குறிஞ்சிவாணன், வி.என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், மு.கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, கே.எம்.கே. ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், பி.சி.என்.கண்ணன், ஓ.ஆறுமுகம், டி.முரளிதரன், எழில் ராஜா, தமிழினியன் உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

### இதுவரை 1 கோடியே 87 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது!

# ஜன.25 வரை பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல் நீட்டிப்பு!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தகவல்!



சென்னை, ஜன.21-

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 18.01.2025 வரை 85 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் திருநாள் தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என அறிவித்தார்கள்.

அதன்படி, கடந்த 9.1.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கி வரும் சைதாப்பேட்டை-11 நியாயவிலைக் கடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாய விலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, 18.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 87 லட்சத்து 14 ஆயிரத்து 464 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 85 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளன.

**ஜனவரி 25–ந்தேதி வரை பொங்கல் தொகுப்பு வழங்கப்படும்!**

மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி வருகின்ற 25.01.2025 அன்று வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கோட்டூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல் முன்னிலையில்-

# நா.த.க., அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக்கட்சிகளில் இருந்து விலகி 50 குடும்பங்கள் கழகத்தில் இணைந்தனர்!

திருவாரூர், ஜன.21 -

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் நாம் தமிழர் மற்றும் அ.தி.மு.க. கட்சிகளில் இருந்து விலகிய 50குடும்பங்கள், தங்களை ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேல் அவர்களின் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் திருத்துறைப் பூண்டி தொகுதிபார்வையாளர் என். வி.காமராஜ் வாழ்த்துகூறி வரவேற்றார்.

திருத்துறைபூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோட்டூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பால.ஞானவேலின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த இணைப்பு விழாவில், நாம் தமிழர், அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளில் இருந்து விலகிய 50குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கழகத்தில் இணையும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு அழைப்பாளராக திருத்துறைப்பூண்டி தொகுதிபார்வையாளர் என்.வி.காமராஜ் கலந்து கொண்டார். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் கழக இருவண்ண துண்டுகளை என்.வி.காமராஜ் அணிவித்து வரவேற்றார்.

அதன்பின்னர் கோட்டூர் வடக்கு ஒன்றியங்களின் வாக்குச் சாவடி நிலை முகவர்களின் ஆலோசனைக் கூட்டங்கள் மீனம்பநல்லூர் மற்றும் ஆதிச்சபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற திருத்துறைப்பூண்டி தொகுதி பார்வையாளர் என்.வி.காமராஜ் தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி வாக்குசாவடி முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் வாக்குசாவடி முகவர்கள் தங்கள் பகுதியின் அனைத்து வீடுகளுக்கும் சென்று கழக பொற்கால ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாக திண்ணைப் பிரச்சாரம் செய்து, கழக தலைவர், திராவிட நாயகர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் இலக்கான 200+என்கிற வெற்றியினை கழக கூட்டணி பெற்றிட ஆற்ற வேண்டிய பணிகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், முன்னாள் ஊராட்சி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பாகுபலி சிறந்த முதல் பரிசைப் பெற்றது. இந்த பரிசினைப் காளையின் உரிமையாளர் மோகன், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கத்திடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.